| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **157/2017** |
| **DATE** | : | **07.11.2025** |
| **பெயர்** | : | **சபாபதி** |
| **தந்தை பெயர்** | : | |

**<u>நீதிமன்ற குறிப்பு –</u>** சாட்சியின் வயோதிகம் மற்றும் உடல்நிலை காரணமாக சாட்சி இருக்கயைில் அமர வைக்கப்பட்டு சாட்சியம் பதியம் செய்யப்படுகிறது.

**<u>வாதி தரப்பு பி.வா. சா.1 குறுக்கு விசாரணை</u>**

**1.** நான் வனத்துறையில் பணியாற்றி பணி ஓய்வு பெற்றேன். எங்கள் வீட்டு குடும்ப முறையை நாகசாமி நாயகர் தான் செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை 1970ல் இறந்துவிட்டார். நாகசாமி , நான் மற்றும் எனது சகோதரர் சுப்பிரமணி அனைவரும் பரம்பரை மிராசு என்ற முறையில் தான் கோவிலில் பணிபுரிந்து வருகிறோம். நாகசாமி 2016ல் இறந்துவிட்டார். அவர் மகன் சங்கர் மற்றும் சங்கரின் மகன் வினோத் ஆகியோர் தற்போது கோவிலில் பணியாற்றி வருகிறார்கள். எங்களுக்கு சைவ ஆகமத்தில் தீட்சை அடையவில்லை. எங்களது மூல புருஷர் சாளுவ நாயஹார் என்றால் சரிதான். ஏகாம்பர நாயகர் தான் எங்கள் வழி தோன்றல். எனது தாத்தா ஏகாம்பர நாயகர். அவருக்கு சோமு, தாது என்று இரு மகன்கள். எனது பெரியப்பா சோமு நாயகருக்கு வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார்.

2. வாதி சுப்பிரமணி நாயக்கரின் தந்தை பெயர் கச்சி நாயகர். தென்னேரி சுந்தரேச குருக்களுக்கு பட்டம்மாள் முறை வழங்கியது செல்லாது என்று வழக்கு நடந்தது. அந்த வழக்கை எனது அண்ணன் நாகசாமி மற்றும் வாதிகள் ஒன்றாக நடத்தினார்கள் என்றால் எனக்கு தெரியாது. விதவை சுவீகாரம் செல்லாது என்று எனது அண்ணன் ஆட்சேபனை செய்தார் என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தை கையெழுத்து போடுவார். 1917ல் எங்கள் குடும்பத்தில் மூதாதையர்களுக்குள் வழக்கு நடந்த விவரம் எனக்கு தெரியும். வா.சா.ஆ–7 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அதில் எனது தந்தை இளவர் என்ற

முறையில் காண்பிக்கப்பட்டுள்ளார். அதில் வாதியின் தந்தை, தாத்தா மற்றும் பெரியப்பா சோமசுந்தர நாயகர் ஆகியோர் தரப்பினார் ஆவார். அந்த வழக்கில் சாளுவ சுப்புராய நாயகருக்கு 5 பாகம், வாதியின் தகப்பனாருக்கு 1 பாகம் என்று ஒதுக்கப்பட்டது. அதில் எங்கள் குடும்பத்தினருக்கும் ஏகாம்பர நாயகருக்கும் 1 பாகம் தான் ஒதுக்கப்பட்டது.

3. சாளுவ சுப்புராய நாயகர், சோமசுந்தர நாயகர் ஆகியோர் வாதியின் சொந்த பெரியப்பா என்றால் எனக்கு தெரியாது. நானும் வாதி ராஜப்பாவும் பத்து நாள் பங்காளிகள். நாயகர், பட்டர், தீட்சிதர் மற்றும் குருக்கள் என்பது கோவிலில் உள்ள நான்கு பணியிடங்கள் . சாளுவ சுப்புராய நாயகர் மற்றும் சோம சுந்தர நாயகருக்கு ஆண் வாரிசுகள் கிடையாது என்று சொன்னால் எனக்கு தெரியாது. எனது தந்தை தாது நாயகரின் கையெழுத்தை நான் பார்த்துள்ளேன். சாட்சியிடம் வா.சா.ஆ–6 ஆவணத்தில் உள்ள கையெழுத்து காண்பிக்கப்பட்டது அது தனது தந்தையுடையது அல்ல என்று சாட்சி தெரிவித்தார்.

4. கைலாசநாதர் கோவில், அனேக கங்காதீஷ்வரர் கோவில், வண்ணி விநாயகர் கோவிலிலும் எங்கள் இரு குடும்பத்தாருக்கு மட்டுமே உரிமை உள்ளது. நான்கில் ஒரு முறை உள்ளது என்று சொல்வதை காட்டுவதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளோம் என்றால் வழி முறையாக வந்ததை சொல்கிறோம். எனது தந்தை தாது நாயகர் 4ல் 1பங்கு தான் முறை செய்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணம் கிடையாது, அது தான் வழக்கம். எனது தந்தை இறந்ததற்கு பிறகு நாங்கள் 4 சகோதரர்களுக்கிடைய முறைகளை பிரித்து கொண்டது குறித்து ஆவணம் எதுவும் எழுதப்படவில்லை. நான் வனத்துறையில் 1980ல் பணியில் சேர்ந்தேன். அப்போது 4ல் 1 பங்கு முறையை பார்த்துக் கொள்ள கோரி எனது சகோதரர்களுக்கு கடிதம் எதுவும் கொடுக்கவில்லை.

5. பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்பு தான் கோவில் பணிக்கு வந்தேனா என்றால் பணியில் இருக்கும் போதும் பணிபுரிந்தவர்களுக்கு உதவி செய்தேன்.

கோவிலின் அர்ச்சனை டிக்கெட்டில் எனக்கு ஒரு பங்கு உண்டு அதனை நான் எவ்வாறு வாங்குவேன் என்றால் ஞாபகமில்லை. மாவடி முறை என்பது தனியாக கிடையாது, மூல ஸ்தானத்துடன் சேர்ந்தது. எனது தந்தைக்கும் வாதியின் தந்தைக்கும் இடையே முறை சம்மந்தமாக என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்றால் 1917ல் ஏற்பட்ட வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் தான் இருந்தது. வாதி வெளிநாட்டில் கனிசமான காலம் தங்கியிருந்தார், எவ்வளவு காலம் என்று குறிப்பிட்டு தெரியாது.

6. 1917 தீர்ப்பாணையில் யாருக்கு என்ன முறை எந்த கோவிலில் என்று வா.சா.ஆ–7 முடிவானது. வா.சா.ஆ.7 முன்னிலைக்கு தான் எங்களது பங்கை கோருகிறோம். அதில் உள்ள 10 என்பது ஆண்டை குறிக்கிறது என்றால் சரியல்ல, அந்த தீர்ப்பாணையில் உள்ள 10 எதை குறிக்கிறது என்று எனக்கு தெரியாது. சாளுவ சுப்புராய நாயகர் மற்றும் சோம சுந்தர நாயகர் இருவரும் அந்த தீர்ப்பாணையில் தரப்பினராக உள்ளனர். சாளுவ சுப்புராய நாயகர் மற்றும் சாளுவ சோம சுந்தர நாயகர் அவர்களது முறையை யார் செய்கிறார்கள் என்று எனக்கு தெரியாது.

7. பதிலுரையில் உள்ள விவரங்களை நானும் எனது மூத்த சகோதரரும் வழக்கறிஞரிடம் தெரிவித்தோம். எனது தந்தை ¼ முறையை செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. எனது தந்தை எந்த வருடத்தில் இருந்து முறை செய்தார் என்று தெரியாத போது எதன் அடிப்படையில் காலம் காலமாக செய்து வருகிறோம் என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் கோவில் ஆவணங்களின் அடிப்படையில். எனது தாத்தா எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. ஏகாம்பர நாயகர் எனது தந்தைக்கு ¼ முறை செய் என்று உத்தரவு இட்டதற்கான ஆவணம் எதுவும் இல்லை. எனது தந்தை இறந்த பிறகு நான்கு சகோதரர்களும் முறை செய்ய கோரி கோவிலில் இருந்து எந்த கடிதமும் கொடுக்கவில்லை. கோவிலில் தட்டு காணிக்கை, ஆர்சிதம் அனைத்தையும் முறைதார்கள் தான் பிரித்து கொள்வோம். 4ல் 1 பாகம் பிரித்து கொள்வது சம்மந்தமாக கணக்கு

ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. 4ல் 1 பாகம் என்று நான் சொல்வது வாய்மொழி ஆதாரம் தவிர வேறு எதுவும் கிடையாது என்று சொன்னால் சரிதான். **கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.